# ஊடக அறிவித்தல்

## க.பொ.த. (சா/ தர)ப் பரீட்சை – 2024 (2025)

# பெறுபேற்று மீள்பரிசீலனை விண்ணப்பப்படிவம் கோரல்

1 மேற்குறித்த பரீட்சையின் மீள்பரிசீலனைக்கு விண்ணப்பப்படிவங்கள் நிகழ்நிலையில் மாத்திரம் கோரப்படும்.

2. பாடசாலை பரீட்சார்த்திகள் மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஆகிய இருவகைப் பரீட்சார்த்திகளும் மீள்பரிசீலனைக்கு விண்ணப்பிக்கும் போது தாமே விண்ணப்பங்களை முன்வைத்தல் வேண்டும்.

3. விண்ணப்பம் கோரப்படுதலானது 2025.07.14ஆம் திகதி ஆரம்பமாவதோடு 2025.07.28ஆம் திகதி நிறைவடையும்.

4. மீள்பரிசீலனைக்காக விண்ணப்பிப்பதற்கு பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றவும்

   * பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் (https://www.doenets.lk) இனுள் பிரவேசித்து 'எமது சேவை' என்பதின் கீழ் உள்ள "Exam Information Centre" இன் மீது Click செய்வதன் மூலம்
   * பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ தொலைபேசி பிரயோகம் (Mobile Application) ஆன DOE இற்கு சென்று 'Exam Information Centre" இன் மீது Click செய்வதன் மூலம்
   * https://onlineexams.gov.lk/eic இனுள் பிரவேசிப்பதன் மூலம்

5. முறைமைக்குள் பிரவேசிக்கும்போது தாங்கள் க.பொ.த. (சா/தர)ப் பரீட்சை – 2024(2025) பரீட்சைக்குத் தோற்றியபோது பயன்படுத்திய பரீட்சை சுட்டெண் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையே பயன்படுத்துதல் வேண்டும். கணக்கொன்று இல்லை எனில் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றை உள்ளிட்டு கணக்கொன்றினை ஆரம்பித்துக் கொள்ளல் வேண்டும்.

6. விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துவதற்கு முன்பாக Technical Instructions, Common Instructions மற்றும் அறிவுறுத்தல் வீடியோவைப் பார்த்தல் என்பன சரியான முறையில் படிவத்தை நிரப்புவதற்கு அத்தியாவசியமானதாகும்.

7. ஒரு பாடத்துக்கான மீள்பரிசீலனை செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 200 ஆகும். தபால் அலுவலகத்திலோ அல்லது Credit card / Debit card மூலமோ பணத்தைச் செலுத்தலாம்.

8. பணத்தைச் செலுத்திய பின்பு விண்ணப்பப்படிவத்தை PDF முறையில் பதிவிறக்கம் (Download) செய்யலாம் என்பதோடு அவ் விண்ணப்படிவத்தை தங்களது பொறுப்பில் வைத்திருக்கவேண்டும். பணத்தைச் செலுத்திய பின்பு தங்களது தொலைபேசி இலக்கத்துக்கு SMS செய்தி கிடைக்கப்பெறும்.

9. நீங்கள் பெறுபேற்று மீள்பரிசீலனை செய்வதற்கு எதிர்பார்க்கும் சகல பாடங்களோடு மீள்பரிசீலனை விண்ணப்பப்படிவத்தில் கோரப்பட்ட விபரங்களைச் சரியாகப் பூரணப்படுத்துதல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். உரிய பணம் செலுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்களுக்கென செலுத்தப்பட்ட பணம் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது.

10. இது தொடர்பான ஏதேனும் விசாரணைகள் தேவைப்படின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

| | |
|---|---|
| பாடசாலை பரீட்சைகள் மதிப்பீட்டுக் கிளை | - 011 – 2785231 / 011 2785216 / 011 2784037 |
| உடனடி அழைப்பிற்கு | - 1911 |

ஏ. கே. எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்